தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆனி 19, பிரஜோற்பத்தி-திருவள்ளுவர் ஆண்டு 2022

1991 ஜூலை 3, புதன்கிழமை

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் தலைமையில் 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்):

''இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.''

இந்தத் தொழிலை இக்கருவியால் இன்னவன் முடிப்பான் என்று ஆராய்ந்த பிறகு, அத்தொழிலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

(குறிப்பு:— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

1. உறுப்பினர் பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல்.

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்): மாண்புமிகு அமைச்சர்களே, அங்கத்தினர்களே, இன்றைய முதல் நிகழ்ச்சி, ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல் ஆகும். யாராவது இருக்கிறார்களா? ஏற்கெனவே உறுதிமொழி எடுத்துக் கொள்ளாத உறுப்பினர்கள் இருந்தால் அவர்கள் இப்பொழுது உறுதிமொழி எடுத்துக் கொள்ளலாம். அரசமைப்புச் சட்டத்தின்படி உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்ளாமல் பேரவையில் அமரக் கூடாது. யாரும் இல்லையே!

2. பேரவைத் தலைவர் தேர்தல் :

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்): அடுத்து பேரவையின் இன்றைய அலுவல் 'அரசமைப்பின் 178-வது பிரிவின்கீழ் பேரவை தலைவர் தேர்தல்' ஆகும். அப்பதவிக்கு வேட்பாளர்களின் வேட்புத் தாள்கள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளன. சட்டமன்றப் பேரவை விதிகளின்; 7-வது விதி, உள்விதி (4)-ன்படி